*மக்கள் ஆய்வகம்*

*வழங்கும்*

## கருத்துக் கணிப்பு குறித்த விரைவுக் கணிப்பு

# மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்

&

## நீரோட்டம்: அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

*களஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

# ஆய்வுத் தொகுப்பு வெளியீடு

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*

2013 நவம்பர் 07-10

*ஊடகவியலார் சந்திப்பு:*

**12 நவம்பர் 2013**

*இடம்:*

சென்னை பத்திரிகையாளர் மன்றம்

அரசினர் தோட்டம், சென்னை 600 002

## மக்கள் ஆய்வகம் வழங்கும்

# *கருத்துக் கணிப்பு குறித்த கணிப்பு*

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வகப் பின்னணி*

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் பயிலரங்குகளையும் மக்கள் ஆய்வகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மக்களின் உள்ளக் கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில், 2001 ஜனவரி தொடங்கி இதுவரை தமிழகம்-புதுவை மற்றும் தென்னிந்திய அளவில் 25-க்கும் மேற்பட்ட சுற்றுகள் பண்பாடு-அரசியல் தொடர்பான பேராய்வுகளை நடத்தியுள்ளது. நகரை மையமாகக் கொண்டு இதுவரை செயல்பட்டு வந்த மக்கள் ஆய்வகம் கிராமப்புற இளைஞர், சிறார் மற்றும் மகளிரின் திறமைகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் கிராமிய ஆய்வு பயிற்சி மையம் ஒன்றை கடந்த செப்டம்பர் முதல் தொடங்கியுள்ளது.

### *ஆய்வு அணுகுமுறை*

தேசிய அளவில் இன்று விவாதத்திற்குரியதொரு பிரச்சனையாகத் திகழும் கருத்துக் கணிப்புகள் குறித்து அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையமும் முரண்பட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள பின்னணியில், மக்களுடைய எண்ணப்போக்குகளை அறிவியல்பூர்வமாக ஆய்வுசெய்வது சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் உதவும் என்பதால் ஒரு விரைவுக் கணிப்பு நடத்தப்பட்டது. தமிழகத்தின் ஆறு மண்டலங்களில் (சென்னை, நாகை, திருச்சி, தேனி, நெல்லை, கோவை), நவம்பர் 07 முதல் 10 வரை, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில் களஆய்வு நடைபெற்றது. மக்கள் ஆய்வகத்தின் கிராமிய மையத்தில் பயிற்சிபெற்ற நால்வர் ஆய்வில் கலந்துகொண்டது இதன் சிறப்பம்சம். மண்டலத்திற்கு 200 பேர் வீதம் மொத்தம் 1200 பேரிடம் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன. கருத்துப் பகிர்வுக்காக அணுகிய 1550 பேரில் 350 பேருக்கு (22.6%) கருத்துக் கணிப்பு பற்றிப் (பதில்சொல்லும் அளவுக்கு) போதிய விவரங்கள் தெரியாததால் ஆய்வில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பண்பாடு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, *பேரா. டாக்டர் ராஜநாயகம்* உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது.

### *பங்கேற்றோர் பின்னணி*

ஆண்களும் பெண்களும் ஏறத்தாழச் சம அளவில் பங்கேற்ற இந்தக் கள ஆய்வில் *வயதுரீதியாக,* வயது 25 வரை - 31.6, வயது 26 முதல் 40 வரை - 50.0, மீதி - வயது 40-க்கு மேல். *கல்வியைப்* பொருத்த மட்டில், பெரும்பாலோர் (68.2) கல்லூரி மற்றும் தொழிற்கல்வி படிப்பும், ஏறத்தாழ நான்கில் ஒருவர் (24.2) பள்ளிக் கல்வியும் படித்துள்ளவர்கள். *கட்சிரீதியாக*, ஏறத்தாழ நான்கில் மூன்று பேர் (72.7) கட்சி சாராதவர்கள் / தகவல் தர விரும்பாதவர்கள். கட்சி சார்புடையவர்களில், அதிமுக - 10.6, திமுக - 7.6, காங்கிரஸ் - 3.0, பாஜக - 1.5.

கருத்துக் கணிப்பு குறித்த இந்தக் கணிப்புக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படாத பிற காரணிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## *ஆய்வு முடிவுகள்*

**(01) கருத்துக் கணிப்பின் விளைவுகள்:**

தேர்தலை முன்வைத்த கருத்துக் கணிப்புகள் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்துத் தமிழக வாக்காளரிடம் சாதகமான (60.0) பார்வை வெளிப்படுகிறது. எனினும், மூன்றில் ஒருவருக்கு மேல் (36.6) கசப்புணர்வையும் வெளிப்படுத்துகின்றனர்.

| | |
|---|---|
| **மக்களின் மனநிலையை அறிந்துகொள்ள உதவுகிறது** | **32.5** |
| வாக்காளர்கள் தெளிவான முடிவெடுக்க உதவுகிறது | 27.5 |
| **இன்னும் முடிவு செய்யாத வாக்காளர்களை மேலும் குழப்புகிறது** | **25.8** |
| மக்களை ஒரு கட்சி/அணிக்குச் சாதகமாக/எதிராகத் திசை திருப்புகிறது | 10.8 |

(மீதி - பிற பதில்கள் / பதில் சொல்லாதோர்)

**(02) அறிவியல்பூர்வ அணுகுமுறையா?**

கருத்துக் கணிப்புகள் அறிவியல்பூர்வ அணுகுமுறையைப் பின்பற்றுவதில்லை என்பது சிறுபான்மைக் கருத்தாகத் தென்பட்டாலும் (10.8), குறைந்த எண்ணிக்கையில் கருத்துக் கேட்பது ஐந்தில் ஒருவரது (21.7) அதிருப்திக்கு ஆளாகிறது. தவிர, கணிப்பு நிறுவனங்கள் தமக்குச் சாதகமான முடிவுகளுக்காக அணுகுமுறையை வளைத்துக்கொள்வதும் தரவுகளை 'cook up' செய்வதும் கடும் விமர்சனத்திற்கு ஆளாகின்றன (35.0). கணிப்புகளின் அணுகுமுறையை ஏற்கும் மனநிலை நான்கில் ஒருவரிடம் (25.0) மட்டும் வெளிப்படுகிறது.

| | |
|---|---|
| அறிவியல்பூர்வ அணுகுமுறை இல்லை | 10.8 |
| மிகக் குறைவான நபர்களையே சந்திப்பதால் சரியான முடிவுகளை அடைய முடியாது | 21.7 |
| சமூக அறிவியல் ஆய்வுகளைப் பொருத்தவரை, "சர்வே" என்பது அறிவியல்பூர்வமானதுதான் | 15.8 |
| அறிவியல்பூர்வ வழிமுறைகளைப் பின்பற்றினால், எண்ணிக்கை ஒரு பிரச்சனையல்ல | 9.2 |
| உள்நோக்கத்தோடு தமக்குச் சாதகமாக அணுகுமுறையை அமைத்துக் கொள்கிறார்கள் | 19.2 |
| மக்களைச் சந்திக்காமலே தரவுகளை 'cook up' செய்துவிடுகிறார்கள் | 15.8 |

**(03) கருத்துக் கணிப்புக்குத் தடையா?**

கருத்துக் கணிப்புகள் நடத்தப்படும் விதம் குறித்துப் பல்வேறு ஐயப்பாடுகளை மக்கள் எழுப்பினாலும், கணிப்புகளைத் தடைசெய்யக் கூடாது என்ற எண்ணவோட்டம் மிக அழுத்தமாக (49.1) பதிவாகியுள்ளது கவனிக்கத் தக்கது:

| | |
|---|---|
| **மக்கள் மனப்போக்கை அறிந்துகொள்ள உதவுவதால் இவற்றைத் தடைசெய்யக்கூடாது** | **16.7** |
| கருத்துச் சுதந்திரத்தின் ஓர் அம்சம்/ ஜனநாயக உரிமை என்பதால் தடைசெய்யக்கூடாது | 15.8 |
| **சில அரசியல்வாதிகளின் வீண் பயத்தை முன்னிட்டு தடைசெய்ய முயல்வது சரியல்ல** | **13.3** |
| மக்கள் "மெச்சூர்" ஆனவர்கள், எதை ஏற்பது எதை ஒதுக்குவது என்பது தெரியும் - எனவே தடை தேவையில்லை | 3.3 |

கணிப்புகள் பெரும்பாலும் பொய்த்துப்போவதாலும் அவற்றால் சமூக நன்மை ஏதுமில்லை என்பதாலும் அவை தேவையில்லை என்ற கருத்தும் கணிசமாக வெளிப்படுகிறது (13.4).

கணிப்புகளால் பிரச்சனைகள் அதிகமாவதால், அவற்றுக்கு ஒட்டுமொத்தமாகத் தடை கோருவோர் மிகச் சிறுபான்மை (9.2) என்றாலும், அரசியல் உள்நோக்கத்துடன்/பரபரப்புக்காக நடத்தப்படும் கணிப்புகளை மட்டும் தடை செய்ய சற்று அதிக (16.7) ஆதரவு வெளிப்படுகிறது.

ஏற்கெனவே உள்ள நெறிமுறைகளை அமுல்படுத்தினாலே போதும், புதிய கட்டுப்பாடுகள் அவசியமில்லை என்ற கருத்தும் ஓரிருவரிடம் நிலவுகிறது (5.0).

**(04) தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாடு:**

கருத்துக் கணிப்பு குறித்த தேர்தல் ஆணைய நிலைப்பாடு சிறுபான்மையினரது பாராட்டுக்கும் பெரும்பான்மையினரது விமர்சனத்துக்கும் ஆளாகிறது. ஆணையத்தின் நிலைப்பாட்டில் வெளிப்படும் "மேட்டிமைத்தனமான" அணுகுமுறை (elitist approach) நான்கில் ஒருவரது (26.6) கண்டனத்துக்கு ஆளாவதோடு, அரசியல் உள்நோக்கமும் பெரும்பாலோரால் (45.0) கற்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மிகப் பொறுப்பான, பாரபட்சமற்ற நிலைப்பாடு | 12.5 |
| தன்னுடைய அதிகார வரம்பை மீறிய கண்டிப்பு | 12.5 |
| ஆட்சியாளர்களின் நிர்ப்பந்தத்திற்குப் பணிய வேண்டிய கட்டாயம் | 17.5 |
| தேர்தல் முறை தொடர்பான சமீபத்தைய உச்சநீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பும் முயற்சி | 15.0 |
| ஆணையர்களின் தனிப்பட்ட விருப்புவெறுப்பே காரணம் | 12.5 |
| வாக்காளர்கள் சுயமாகச் சிந்திக்கக் கூடியவர்கள் என்பதை ஆணையம் ஏற்றுக்கொள்ளாததன் விளைவு | 15.8 |
| கணிப்பு பற்றிய சரியான புரிதல் ஆணையத்திற்கு இல்லாததன் விளைவு | 10.8 |

**(05) கட்சிகளின் நிலைப்பாடு:**

தேசிய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் அரசியல் கட்சிகளின் கணிப்புகள் குறித்த நிலைப்பாட்டுக்கு சுயநலமே காரணமாக மிகப் பெரும்பாலோரால் இனங்காணப்படுகிறது. காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரை, அது கணிப்பைத் தடைசெய்யக் கோருவதன் காரணங்களாக மக்கள் சுட்டிக்காட்டுபவை:

| | |
|---|---|
| **ஊடகங்களில் தற்போது வரும் கணிப்புகள் அக் கட்சிக்குச் சாதகமாக இல்லாதது** | **62.5** |
| கணிப்பு பற்றிய சரியான புரிதல் இல்லாதது | 17.5 |
| **மக்கள் மீது கொண்டுள்ள உண்மையான அக்கறை** | **10.0** |

காங்கிரஸைப் போலவே, பாரதீய ஜனதா கட்சியின் கணிப்புக்கு ஆதரவான நிலைப்பாடும் சுயநலச் செயல்பாடாகவே காணப்படுகிறது:

| | |
|---|---|
| **மக்கள் மீது கொண்டுள்ள உண்மையான அக்கறை** | **4.2** |
| கருத்துச் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக | 4.2 |
| **கணிப்பு அறிவியல்பூர்வமானது என்ற புரிதல்** | **7.5** |
| ஊடகங்களில் தற்போது வரும் கணிப்புகள் அக் கட்சிக்குச் சாதகமாக இருப்பது | 76.5 |

**(06) செம்மையான கணிப்புக்குப் பரிந்துரைகள்:**

கருத்துக் கணிப்புகளை விமர்சனங்களுக்கு அப்பால் செம்மையுற நடத்துவதற்கு மக்கள் முன்வைக்கும் பரிந்துரைகளில் மூன்று முக்கியத்துவம் பெறுகின்றன:

| | |
|---|---|
| பரபரப்பான செய்திக்காக மட்டுமில்லாமல், மக்கள் பிரச்சனைகளை முன்வைக்கும் பயனுள்ள ஆய்வாக மாற்ற வேண்டும் | 30.8 |
| எப்படி, எப்போது கணிப்பு நடத்தப்படுகிறது போன்ற விவரங்களை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் | 26.7 |
| கணிப்பு நிறுவனங்கள் தங்களது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் | 26.7 |

மேலுள்ளவை தவிர, அரசியல் கட்சிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ 'sponsor' செய்வது அல்லது குறுக்கிடுவதைத் தவிர்க்க வேண்டும் (7.5), கருத்துக் கணிப்பில் உடன்பாடில்லை என்பதால் அதைத் தடை செய்தே ஆகவேண்டும் (4.2) ஆகியவையும் சிறுபான்மைக் கருத்துக்கள்.

**(07) மக்கள் ஆய்வகத்தின் கணிப்புகள்...**

மக்கள் ஆய்வகம் மேற்கொள்ளும் கணிப்புகளுக்கு மக்கள் மத்தியில் பரவலான ஏற்பு இருக்கும் அதே வேளையில் ஏறத்தாழ ஐந்தில் ஒருவரது (19.2) விமர்சனத்துக்கும் ஆளாகிறது.

| | |
|---|---|
| **பெரும்பாலும் சரியான கணிப்பு** | **43.3** |
| பொதுவாக நடுநிலையான, நம்பகமான கணிப்பு | 18.3 |
| **பெரும்பாலும் தேர்தல் கணிப்போடு நின்றுவிடாமல், மக்கள் பிரச்சனைகளை விரிவாக முன்வைக்கிறது** | **13.3** |
| ஒரு கட்சிக்குச் சார்பாகவே பெரும்பாலும் முடிவுகள் | 10.0 |
| **அறிவியல்பூர்வமானதாக இல்லை** | **9.2** |


பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
மக்கள் ஆய்வகம்
12 நவம்பர் 2013


*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், விழுக்காடுகளின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம்.

**நன்றி**


*தொடர்புக்கு:*
மக்கள் ஆய்வகம்
122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094
கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்
பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்
செல்: 8870341318 (தலைமை அலுவலகம்) / 8870431319 (களப் பணியகம்)
மின்னஞ்சல்: peoplestudies@gmail.com


"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"

# நீரோட்டம்:
## அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

### *களஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

#### *சமூக-உளவியல் ஆய்வு அணுகுமுறை*

*வரலாறு வரைவிற்கு ஆய்வுகள் உதவ வேண்டுமென்றால், அவை மக்களது கருத்துக்களை மட்டுமில்லாமல் அவர்களது எண்ணப் போக்குகளின் திசைகள் மற்றும் உணர்வுகள் ஆகிய அனைத்து அம்சங்களையும் பதிவு செய்யும் "ஒருங்கிணைந்த அணுகுமுறை"யைக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். அத்தோடு, ஆய்வு அணுகுமுறை சரியானதாக* (validity), *நம்பகமானதாக* (reliability), *தமிழக மக்களின் பல்வேறு குணாம்சங்களையும் பிரதிபலிப்பதாக* (representative sampling) *அமைந்திருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, மக்கள் ஆய்வகத்தின் தொடர் ஆய்வுகளுக்கென தமிழ் / இந்தியப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (*quantitative*) மற்றும் பண்பியல் (*qualitative*) கூறுகளை உள்ளடக்கி, களச் சோதனை* (field testing) *வழியாக வடிவமைக்கப்பட்டதுதான் சமூக-உளவியல் அணுகுமுறை (*social-psychological approach*).*

*கருத்துக்கணிப்பு நிறுவனங்கள் வழக்கம் போல மேற்கொள்ளும் புள்ளிவிவரங்களைக் கோரும் கருத்துக் கேட்பு போலில்லாது, சமூக-உளவியல் உண்மைகளுக்கேற்ப ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தி, நேரடி உரையாடல் வாயிலான கருத்துப் பகிர்வின் மூலமாகத் தரவுகளைச் சேகரிக்கும் இந்த அணுகுமுறையை "ஆற்றொழுக்கு அணுகுமுறை" என்றும் சொல்லலாம். நுணுகி நோக்குதல், கலந்துரையாடுதல், "மனம்விட்டுப்" பேசுதல், உள்ளிணைந்த மொழியை (*inclusive language*) பயன்படுத்துதல், பங்கேற்பாளரின் அப்போதைய மனநிலைக்குள் நுழைந்து உரையாடலைத் தொடங்குதல், அவரவர் எண்ண ஓட்டத்திற்கேற்ப நெகிழ்ந்து கொடுப்பதாக வினாக்களைத் தகவமைத்துக் கொள்ளுதல் முதலிய பண்பியல் (*qualitative*) உத்திகளும், தரவுறுதி செய்யப்பட்ட (*standardised*) வினாக்கள் அடங்கிய வினாத்திரள் (*questionnaire*) அடிப்படையிலான எண்ணியல் (*quantitative*) உத்திகளும் நமது அணுகுமுறையில் பயன்படுத்தப்படுகின்றன. தேவைக்கேற்ப, வரையுறு (*closed type*) வினா, வரையிலி (*open-ended*) வினா ஆகியவை இடம்பெறுகின்றன.*

*ஆசிரியர்: ச.ராஜநாயகம் / வெளியீடு: மக்கள் ஆய்வகம் /* ISBN: 978-81-910217-9-0